Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.263/2025 Cr.No.83/2024 Kandili PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7, Page.No.

| | |
|---|---|
| பெயர் | சோபியா |
| வயது | 32 |
| தந்தை/கணவர் பெயர் | பிரகாசம் |
| தொழில் | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம்/பணிபுரியும் இடம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 ) on the 26th day of May 2026.

**சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 05.08 PM**

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 05.19 PM**

**<u>முதல் விசாரணை</u>.- (எதிரி ஆஜர்)**

**நான் தற்போது திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறுதிக்கட்ட புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.அஜித்குமார் அவர்கள் பணி நிமித்தம் காரணமாக வெளியூர் சென்றுள்ளதால் அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்காகவும் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் கந்திலி காவல் நிலையத்தில் கடந்த 02.02.2024 அன்று காவல் உதவி ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, கலைச்செல்வன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்தப் புகாரினைப் பெற்று அன்றைய தினமே காலை 11.00 மணியளவில் கந்திலி காவல் நிலையக் குற்ற எண்.83/2024, இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்**

**தகவல் அறிக்கை அ.சா.ஆ.4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே 11.00 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் முருகன் மற்றும் பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே தேதியன்று பகல் 12.30 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து வழக்கு சொத்தான மாடு கட்டும் வெள்ளை நிற கயிறை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்–91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம்–91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் 1 மற்றும் 3–ம் எதிரிகளை அன்றயை தினமே 14.30 மணியளவில் குனிச்சி பேருந்து நிறுத்தத்திடம் வைத்து கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்த வேண்டி தக்க வழக்காவலுடன் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் 2ம் எதிரிக்கு 41–A சம்மன் சார்வு செய்தேன். பின்னர் இவ்வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.அஜித்குமாரின் பார்வைக்கு வைத்தேன். வழக்குக் கோப்பை பெற்றுக் கொண்ட அவர் இவ்வழக்கில் காயமுற்ற கலைச்செல்வனுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.செல்வநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி மருத்துவர் கலைச்செல்வனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கியுள்ளார். மேலும் அவர் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை விசாரணை செய்ததில் என்னிடம் கூறியது போலவே அவரிடமும் கூறியதால் அவர் புதியதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று முதற்கட்ட புலன் விசாரணை முடித்த என்னை காவல் உதவி ஆய்வாளர் விசாரித்தார். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(1)–ன் கீழ் 29.04.2024 அன்று இறுதியறிக்கையை பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

காலை 11.00 மணியளவில் தான் தகவல் கிடைத்தது என்றால் சரிதான். சின்னசொக்கணம்பட்டி என்ற இடமும், சின்னசொக்கணம்பட்டி பேருந்து நிறுத்தமும் வெவ்வேறு இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் சின்னசொக்கணம்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கும் சுமார் 100 அடி தொலைவு இருக்கும். மருத்துவர் போலீசார் விசாரணையின்போது மதியம் 12.30 மணியளவில் அ.சா.1 மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்த பின்னர் தான் புகார்தாரர் மருத்துவமனைக்கு சென்றார். சம்பவம் கோவிந்தாபுரம் கிராமத்தில் நடந்ததாக மருத்துவர் விசாரணையின் போது கூறியுள்ளார் என்றால் சரிதான். விபத்துப்பதிவேட்டில், கத்தி மற்றும் கம்பால் தாக்கியதாக கூறியுள்ளது குறித்து இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் எதிரிகள் மீது அளிக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் சரிவர புலன் விசாரணை செய்யப்படாமல் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.05.26 18:55:40 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.